


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ பிப்ரவரி. 16, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 133 ❖ ரூ.10

### விளையாட்டுப் போட்டியில் பங்கேற்க சென்ற மாணவிகள்

# நீரில் மூழ்கினர்

## புதுக்கோட்டை மாவட்டம் பிலிப்பட்டி ஊராட்சி பள்ளியில் படித்த 4 மாணவிகள் காவிரியில் மூழ்கி பலியானார்கள் பள்ளி தலைமை ஆசிரியர் உள்ளிட்ட மூவர் பணியிடை நீக்கம்

கரூர், பிப். 16-

கரூர் மாவட்டம் மாயனூர் காவிரி ஆற்றில் நீரில் மூழ்கி உயிரிழந்த 4 பள்ளி மாணவிகளின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.2 லட்சம் நிவாரணம் வழங்க உத்தரவிட்டுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலையை அடுத்த பிலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியைச் சேர்ந்த மாணவிகள் 15 பேர் திருச்சி மாவட்டம் ஏழூர்பட்டியில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் நடைபெறும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதாக நேற்று உடற்கல்வி ஆசிரியருடன் வந்துள்ளனர்.

போட்டியில் பங்கேற்றுவிட்டு அவர்கள் கரூர் மாவட்டம் மாயனூர் கதவணை பகுதியை சுற்றி பார்த்துவிட்டு செல்லாண்டியம்மன் கோயிலில் சாமி தரிசனம் செய்து விட்டு காவிரி ஆற்றில் குளிப்பதற்காக இறங்கி உள்ளனர். அப்போது தமிழரசி, இனியா, லாவண்யா, சோபிகா ஆகிய 4 மாணவிகள் நீரில் மூழ்கியுள்ளனர்.

உடனடியாக அங்கிப்பவர்கள் மாணவிகள் மீட்பதற்காக தேடியுள்ளனர். இதுகுறித்து தகவலறிந்த மாயனூர் போலீஸார் சம்பவ இடத்திற்கு வந்து திருச்சி மாவட்டம் முசிறி மற்றும் கரூர் தீயணைப்பு மற்றும்மீட்புப்பணித்துறை நிலையங்களுக்கு தகவல் அளித்தனர்.

இரு நிலைய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை வீரர்கள் மாயனூர் காவிரி ஆற்றில் சுமார் 1 மணி நேரத்திற்கு மேலாக மாணவிகளை தேடிய நிலையில் தமிழரசி, இனியா, லாவண்யாவின் உடல்கள் அடுத்தடுத்து சடலமாக மீட்கப்பட்டன. தொடர்ந்து அடுத்த சில நிமிடங்களில் சோபிகாவின் உடலும் மீட்கப்பட்டது. இதில் உயிரிழந்த மாணவிகள் அல்லாத நீரில் மூழ்கிய 3 மாணவிகளை கீர்த்தனா என்ற மாணவி மீட்டுள்ளார்.

இதுகுறித்து மாயனூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தகவலறிந்த மாவட்ட ஆட்சியர் த.பிரபுசங்கர் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பள்ளி மாணவிகள் 4 பேர் உயிரிந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் மாவட்டம், பிலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் படித்து வந்த மாணவிகள் சோபியா த/பெ.வெள்ளைச்சாமி (7ம் வகுப்பு), தமிழரசி த/பெ. ராஜ்குமார் (8ம் வகுப்பு), இனியா த/பெ.மோகன்குமார் (6ம் வகுப்பு) மற்றும் லாவண்யா த/பெ. பெரியண்ணன் (6ம் வகுப்பு) ஆகிய நான்கு மாணவிகள் எதிர்பாராதவிதமாக சுழலில் சிக்கி ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த மாணவிகளின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக் கொள்வதோடு, அவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்' என்று அதில் கூறப்பட்டுள்ளது.





▶ லாவன்யா, இனியா, தமிழரசி, சோபியா



### இலுப்பூரில் சாலை மறியல்

உயிரிழந்த மாணவிகளின் உடல்கள் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. ஆனால் மாணவிகளின் உடல்களை வாங்க மறுத்து உறவினர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். பெற்றோர்கள் வருவதற்கு முன்பாக பிரேத பரிசோதனை முடிக்கபட்டதால் வாங்க மறுத்தனர். புதுக்கோட்டை இலுப்பூரில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மாணவிகளை விளையாட்டுப் போட்டிக்கு அழைத்து சென்ற ஆசிரியர்களின் கவனக்குறைவால் மாணவிகளின் உயிர் பறிபோனதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இந்நிலையில் மாணவிகள் இறந்த விவகாரத்தில் பள்ளி தலைமை ஆசிரியர் பொட்டுமணி, மற்றும் விளையாட்டு போட்டிக்கு அழைத்துச் சென்ற ஜெபசகேயூ எப்ராயீம் இடைநிலை ஆசிரியர்,திலகவதி பட்டதாரியர்ஆசிரியர்கள் ஆகிய மூவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சேலம் மாவட்டம் கோரிமேட்டில், முன்னாள் முதல்வர் கருணாநிதி பணியாற்றிய பழம்பெருமை வாய்ந்த மாடர்ன் தியேட்டர்ஸ் படப்பிடிப்பு நிறுவனத்தின் புதுப்பிக்கப்பட்டு வரும் நுழைவாயிலில் செல்பி புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

### களஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ்

# ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

சேலம் பிப்.16-


ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

தமிழ்நாட்டில் 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து மாவட்டங்களுக்கு நேரடியாக சென்று வளர்ச்சி திட்ட பணிகள் குறித்து ஆய்வு செய்து வருகிறார். அதன்படி, அவர் வேலூர் மண்டலத்தில் சில நாட்களுக்கு முன்பு கள ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார். அடுத்தகட்டமாக சேலம் மண்டலஅளவிலான கள ஆய்வுக்கூட்டத்துக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தது. இந்நிலையில், சேலம் மண்டல அளவிலான 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான கள ஆய்வு கூட்டம் நேற்றும் இன்றும் 2 நாட்கள் நடைபெறுகிறது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடக்கும் இந்த ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு அதிகாரிகளுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். இந்த ஆய்வு கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து தனி விமானம் மூலம் நேற்று சேலம் சென்றடைந்தார். விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஆய்வு பணிகளை மேற்கொண்டார். கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ், ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு பணிகளைமேற்கொண்ட முதலமைச்சர் ஓமலூரில் நடைபெற்று வரும் திட்டங்களின் செயல்பாடு குறித்து வட்டாச்சியரிடம் கேட்டறிந்தார்.



# சட்டம் ஒழுங்கு எப்படி போனால் எனக்கென்ன என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இருப்பதாக அண்ணாமலை விமர்சனம்



சென்னை, பிப்.16-

காவல்துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டம் ஒழுங்கு எப்படி போனால் எனக்கென்ன என்று இருக்கிறார் என்று அண்ணாமலை கூறியுள்ளார்.

காவல்துறையை கையில் வைத்திருக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டம் ஒழுங்கு எப்படி போனால் எனக்கென்ன என்று இருக்கிறார் என்று தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், "கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே, 29 வயதே ஆன ராணுவ வீரர் பிரபு, திமுக பேரூராட்சி கவுன்சிலர் ஒருவரால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள செய்தியறிந்து, அதிர்ச்சியும் கோபமும் அடைந்தேன். ராணுவ வீரர்களுக்கு, திமுகவினர் அராஜகத்தால், சொந்த ஊரிலேயே பாதுகாப்பில்லை. தங்கள் உயிரையும் துச்சமென கருதி எல்லையில் நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள வீரர்களையும், அவர்கள் குடும்பத்தினரை மிரட்டுவதும், அவர்கள் மேல் தாக்குதல் நடத்துவதும், தற்போது கொலையே செய்யும் அளவுக்கு, திமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் உருமாறியுள்ளது.

காவல்துறையை கையில் வைத்திருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சட்டம் ஒழுங்கு எப்படி போனால் எனக்கென்ன என்று இருப்பதை, பொதுமக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். உடனடியாக கொலையாளிகள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கவும், மேலும் இது போன்ற சமூக விரோதச் செயல்கள் நடக்காமல் தடுக்க வேண்டுமென, தமிழ்நாடு பாஜகசார்பில் வலியுறுத்துகிறேன்" என்று கூறியுள்ளார்.

# ஆளுநராக நியமிக்கப்பட்ட சி.பி.ராதாகிருஷ்ணன் பாஜகவில் இருந்து விலகல்..!



சென்னை , பிப்.16-

பாஜக மூத்த தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணனை ஜார்க்கண்ட் மாநில ஆளுநராக நியமித்து அண்மையில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உத்தரவிட்டார். தமிழ்நாட்டு பாஜக தலைவர்களில் மிகவும் முக்கியமானவர் சி.பி. ராதாகிருஷ்ணன். 2004 முதல் 2007ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு பாஜக தலைவராக இருந்து கட்சியை வளர்த்த அவர், 1998, 1999 என இரண்டு முறை கோவை தொகுதியில் இருந்து மக்களவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு தேசிய கயிறு வாரியத் தலைவராகவும் பதவியில் இருந்துள்ளார். கட்சியில் பல்வேறு பொறுப்புகளை வகித்த இவர்,கேரள மாநில பாஜக பொறுப்பாளராகவும் இருந்துள்ளார்.

ஆளுநராக நியமிக்கப்பட்டவர் அரசியல் சார்ந்தோ, அரசு அமைப்புகளிலோ பதவியில் இருக்கக் கூடாது என்பது விதி. ஆகவே, சென்னையில் உள்ள பாஜக தலைமை அலுவலகமான கமலாலயத்துக்கு வந்த சி.பி.ராதாகிருஷ்ணன், மாநிலத் தலைவர் அண்ணாமலை முன்னிலையில்பாஜகவின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் விலகும் கடிதத்தை அளித்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த சி.பி. ராதாகிருஷ்ணன், "ஜார்க்கண்ட் ஆளுநராக வரும் 18ஆம் தேதி பொறுப்பு ஏற்கிறேன். 1974ல் துவங்கியது என்னுடைய பொது வாழ்வு. இல.கணேசன், ஹெச்.ராஜா, பொன். ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் சிரமமான காலத்திலும் பாஜகவில் பணியாற்றினோம். அடுத்த கட்டத்திற்கு செல்ல வேண்டும் என்ற நிலையில் உள்ளேன். இன்று மகத்தான இளைய தலைமுறையாக பாஜக உள்ளது.

அரசியலில் இருந்து ஓய்வு பெற வேண்டியது அவசியமான ஒன்று. பழங்குடியின மக்கள் அதிகம் இருக்கும் ஜார்க்கண்ட் மாநிலத்தில் பணியாற்ற வாய்ப்பு வழங்கியதற்கு மோடி, அமித்ஷா ஆகியோருக்கு நன்றி. தேவையான அத்தனை அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்ய பாடுபடுவேன்" என்று கூறினார்.

# காதலர் தினத்தை கொண்டாட கோவா சென்ற காதல் ஜோடி கடலில் மூழ்கி பலி

கோவா பிப்.16-

உத்தரபிரதேசத்தை சேர்ந்த காதல் ஜோடி விபு சர்மா(27), சுப்ரியா துபே(26). விபு டெல்லியில் உள்ள ஒரு நிறுவனத்திலும், சுப்ரியா பெங்களூருவில் உள்ள ஒரு நிறுவனத்திலும் வேலை செய்து வந்தனர். இருவரும் காதலிப்பது அவர்களது பெற்றோருக்கு தெரியாது.

இதனிடையே, காதலர் தினத்தை கொண்டாட கடந்த சில நாட்களுக்கு முன் விபு சர்மாவும், சுப்ரியா துபேவும் கோவா சென்றுள்ளனர். அவர்கள் கோவாவில் தங்கி பல்வேறு இடங்களுக்கு சென்றுள்ளனர்.

இந்நிலையில், காதலர் தினம் நேற்று முந்தினம் கொண்டாடப்பட்ட நிலையில் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் காதல் ஜோடி கோவாவின் பலோலம் கடற்கரையில் சுற்றி திரிந்துள்ளனர். அப்போது எதிர்பாராத விதமாக இருவரும் அலையில் சிக்கி கடலில் மூழ்கினர். இது குறித்து மீட்பு குழுவினருக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த மீட்புக்குழுவினர் கடலில் மூழ்கிய 2 பேரையும் மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். ஆனால், 2 பேரையும் பரிசோதித்த மருத்துவர்கள், அவர்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## அரியலூரில் மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான கல்வி சுற்றுலா

அரியலூர் பிப்.16–

அரியலூரில் இருந்து மாற்றுத்திறனாளி சிறுவர்களுக்கான சுற்றுலாவை, ஆர்டிஓ ராமகிருஷ்ணன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



அரியலூர் மாவட்டத்தில்செயல்பட்டு வரும், செவித்திறன் பாதிக்கப்பட்ட ஆரம்பகால பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற, 20 இளம்சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்ப பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்று வரும் 15 இளம் சிறார்கள், மற்றும் அவர்களின் பெற்றோர்கள்,பயிற்சி மைய சிறப்பாசிரியர்களுடன், வைத்தீஸ்வரன் கோவில், பூம்புகார் மற்றும் கீழப்பள்ளம் ஆகிய சுற்றுலா தலங்களுக்கு, கல்வி சுற்றுலா சென்று வர,ஏற்பாடுசெய்யப்பட்ட வாகனத்தினை, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்தட்சிணாமூர்த்தி மற்றும் உதவி சுற்றுலா அலுவலர் சரவணன் மற்றும் பெற்றோர்கள், மைய சிறப்பாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## மதுராந்தகம் அருகே கணவர் மற்றும் அவருடைய நண்பருக்கு விஷம் கொடுத்து கொன்ற பெண் கைது

செங்கல்பட்டு பிப்.16–

மதுராந்தகம் அருகே கணவர், நண்பருக்கு விஷம் கலந்து கொடுத்து கொன்ற பெண் கைது செய்யப்பட்டார்.

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அடுத்த பூக்கத்துறையை சேர்ந்தவர் சுகுமார்(27). இவருடைய மனைவி கவிதா (25). இவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த கூலித்தொழிலாளி அரிலால்(49). இவர் பூக்கத்துறையில் தங்கி இருந்தார். சுகுமாரும், அரிலாலும் நண்பர்களாக பழகி வந்தனர். சுகுமார் தனது மனைவிக்கு மற்றொருவருடன் தொடர்பு இருப்பதாக கூறி கொடுமைப்படுத்தி வந்ததாக தெரிகிறது.

இதனால் ஆத்திரம் அடைந்த கவிதா தன்னுடைய நண்பரிடம் மது வாங்கி வரச்சொல்லி அதில் விஷம் கலந்து தனது கணவருக்கு கொடுத்தார். அவர் விஷம் கலந்த மதுவை தனது நண்பரான அரிலாலுடன் சேர்ந்து குடித்துள்ளார். சிறிது நேரத்தில் அவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்பட்டது. இதையடுத்து அக்கம்பக்கத்தினர் அவர்களை சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமையில் அனுமதித்தனர். சிகிச்சை பலனின்றி நேற்று முந்தினம் இரவு அவர்கள் இருவரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இது குறித்து தகவல் அறிந்த படாளம் காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து கவிதாவை கைது செய்தனர். இறந்த அரிலாலுக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தரவரிசையில் அனைத்து வகை கிரிக்கெட்டிலும் முதலிடம் பிடித்த இந்திய அணி

துபாய் பிப்.16–

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி 3 நாட்களுக்கு முன் முடிவடைந்தது.



அதில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 132 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தபோட்டியில் இந்திய அணி தரப்பில் கேப்டன் ரோகித் சர்மா சதம் அடித்து அசத்தினார். இந்த தொடர் முடிவடைந்த பின்னர் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐசிசி) வீரர்கள் மற்றும் அணிகளின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதில் அணிகளின் தரவரிசையில் டி20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட்டில் ஏற்கனவே இந்திய அணி முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி பெற்ற அபார வெற்றியின் மூலம் டெஸ்ட் தரவரிசையில் இந்திய அணி முதல் இடத்துக்கு முன்னேறி உள்ளது. தற்போது அணிகளின் தரவரிசையில் இந்திய அணி டி20 (267 புள்ளி), ஒருநாள் (114 புள்ளி) மற்றும் டெஸ்ட்டில் (115 புள்ளி) என முதல் இடத்தில் உள்ளது. டெஸ்ட் கிரிக்கெட்டில் இந்திய அணியிடம் அடைந்த தோல்வியின் காரணமாக ஆஸ்திரேலிய அணி 111 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் உள்ளது. இங்கிலாந்து 106 புள்ளி, நியூசிலாந்து 100 புள்ளி, தென் ஆப்பிரிக்கா 100 புள்ளி ஆகிய அணிகள் 3 முதல் 5 இடங்களில் உள்ளன.






தென்காசி மாவட்டம், கடையநல்லூர் நகராட்சிக்கு உட்பட்ட குமந்தபுரம் கிராமத்தில் சிறுபான்மை நலன் மற்றும் பல்நோக்கு வளர்ச்சி திட்டத்தின் கீழ்1,4,10,14,26–ஆகிய வார்டுகளில் சுமார் 37.5 லட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி கட்டிடம் அமைக்கும் பணிக்கு கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர் ரகுமான் 1-வது வார்டில் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் 1-வது வார்டு திமுக செயலாளர் காளிமுத்து, நகர்மன்ற உறுப்பினர் ரேவதி பாலீஸ்வரன், இளநிலை பொறியாளர் ரவிச்சந்திரன், தகவல் தொழில்நுட்ப அணி ஜாகிர் உசேன் மற்றும் பாலீஸ்வரன் ஊர்பொதுமக்கள் அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## விமானத்தை பார்ப்பதே கடைசி ஆசை – விமானத்தில் சென்று தற்கொலை செய்த இளைஞர் எங்கு தெரியுமா?

மும்பை பிப்.16–

மராட்டிய மாநிலம் மும்பையின் குர்லா ரெயில் நிலையத்திற்கு வெளியே உள்ள பாலத்திற்கு அருகே நேற்று முந்தினம் காலை இளைஞர் தூக்கில் தொங்கிய நிலையில் பிணமாக கிடந்தார். இது குறித்து காவல்துறைக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற காவலர்கள் இளைஞரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், உயிரிழந்த இளைஞரின் சட்டை பையில் இருந்து கடிதம் ஒன்றையும் காவலர்கள் கைப்பற்றினர்.

மேற்கொண்டு நடத்தப்பட்ட விசாரணையில் தூக்கில் தொங்கிய இளைஞர் சத்தீஸ்கர் மாநிலத்தை சேர்ந்த லட்சுமி சைத்ராம்(25) என்பது தெரியவந்தது. அவர் சத்தீஸ்கரில் இருந்து விமானம் மூலம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மும்பை வந்துள்ளார். மும்பை போன்ற மெட்ரோ பெருநகருக்கு சைத்ராம் வருவது இதுவே முதல் முறையாகும். விமானத்தில் இதுவரை பயணித்திராத சைத்ராம் தனது தற்கொலை கடிதத்தில், 'விமானத்தை பார்ப்பதே கடைசி ஆசை ஆகையால் தான் ஞாயிற்றுக்கிழமை விமானம் மூலம் மும்பை வந்தேன்' என எழுதி வைத்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்த காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர். சைத்ராம் தற்கொலை செய்து கொண்டாரா?, அல்லது கொலை செய்யப்பட்டு தூக்கில் தொங்கவிடப்பட்டாரா? என்ற கோணத்தில் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியாவில் கடத்தல் தங்கம் சிக்குவது 62.5% அதிகரித்துள்ளதாக நாடாளுமன்றத்தில் மத்திய அமைச்சர் தகவல்

டெல்லி பிப்.16–

நடப்பாண்டில் ஜனவரி மாதத்தில் மட்டும் 384 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பங்கஜ் சவுத்ரி மக்களவையில் தெரிவித்துள்ளார்.



இந்தியாவில் தங்கம் மீதான இறக்குமதி வரி 7.5%-ல் இருந்து 12.5% ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனிடையே வெளிநாடுகளில் இருந்து இந்தியாவிற்கு சட்டவிரோதமாக தங்கம் கடத்தி வரப்படுவதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அந்த வகையில் கடந்த 2020-ம் ஆண்டு 2,155 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது என மத்திய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி நாடாளுமன்ற மக்களவையில் எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

அதே போல் 2021-ம் ஆண்டு 2,383 கிலோ கடத்தல் தங்கம் சிக்கியதாகவும், 2022-ம் ஆண்டு 3,502 கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார். கடந்த 2020 முதல் 2022-ம் ஆண்டு வரை கடத்தல் தங்கம் சிக்குவது 62.5% அதிகரித்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். மேலும் நடப்பாண்டில் ஜனவரி மாதத்தில் மட்டும் 384 கிலோ கடத்தல் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது என பங்கஜ் சவுத்ரி மக்களவையில் தெரிவித்துள்ளார்.

## பாஜகவின் பொறுப்புகளில் இருந்து சி.பி.ராதாகிருஷ்ணன் ராஜினாமா

சென்னை பிப்.16–

ஜார்கண்ட் மாநில கவர்னராக நியமிக்கபட்டுள்ளதால் சி.பி. ராதாகிருஷ்ணன் பாஜகவின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் ராஜினாமா செய்தார்.



நாட்டில் 13 மாநிலங்களுக்கு புதிய கவர்னர்களை நியமித்து ஜனாதிபதி திரௌபதி முர்மு உத்தரவிட்டார். இவர்களில் 6 பேர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதில், தமிழகத்தை சேர்ந்த பாஜக மூத்த நிர்வாகியும் முன்னாள் எம்.பி.யுமான சி.பி.ராதாகிருஷ்ணன் ஜார்கண்ட் மாநில கவர்னராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஜார்கண்ட் மாநில கவர்னராக நியமிக்கபட்டுள்ளதால் சி.பி. ராதாகிருஷ்ணன் பாஜகவின் அடிப்படை உறுப்பினர் உட்பட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் ராஜினாமா செய்தார். நேற்று காலை சென்னை பாஜக அலுவலகத்திற்கு வருகை தந்த சி.பி.ராதாகிருஷ்ணன், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையிடம் ராஜினாமா கடிதத்தை வழங்கினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி கல்வி மாவட்டம், இராயவரம் சு.கதி.காந்தி உயர்நிலைப் பள்ளியில் நேற்று புகையிலையால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி பள்ளியின் தலைமையாசிரியர் பழனியப்பன் தலைமையில் மாவட்ட துணை இயக்குநர் சுகாதாரத்துறை நேர்முக உதவியாளர் சேதுராமன், பல் மருத்துவர் சுகன்யா, சுகாதார ஆய்வாளர் பழனியப்பன், மருத்துவத்துறை சதீஷ் மற்றும் சமூகப்பணியாளர் பர்வீன்பானு ஆகியோர் புகையிலையால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு உரையாற்றினர்.

## ஜனாதிபதி திரௌபதி முர்மு வருகையையொட்டி மதுரையில் 2 நாட்கள் டிரோன்கள் பறக்கத் தடை

மதுரை பிப்.16–

மதுரையில் பிப்ரவரி 17, 18-ல் டிரோன்கள் பறக்கத் தடை விதித்து காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.



ஜனாதிபதி திரௌபதி முர்மு பிப்ரவரி 18-ஆம் தேதி 2 நாள் சுற்றுப்பயணமாக முதல் முறையாக தமிழகம் வருகிறார். பிப்ரவரி 18-ந் தேதி காலை புதுடெல்லியிலிருந்து தனி விமானம் மூலம் மதுரை வரும் அவர், பின்னர் கார் மூலம் பகல் 12.15 மணிக்கு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்று தரிசனம் செய்கிறார். பின்னர் விமானம் மூலம் மதுரையில் இருந்து கோவை செல்கிறார்.

அங்கு ஈஷா மையத்தில் மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை நடைபெற உள்ள மகா சிவராத்திரி விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இந்த நிலையில், ஜனாதிபதி திரௌபதி முர்மு வருகையையொட்டி, மதுரையில் பிப்ரவரி 17, 18-ல் டிரோன்கள் பறக்கத் தடை விதித்து மதுரை மாநகர காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்.

## அரியலூர் மாவட்ட விவசாயிகள் நெல் அறுவடை இயந்திரங்களை பெற புதிய வாய்ப்பு – மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்

அரியலூர் பிப்.16–

அரியலூர் மாவட்ட விவசாயிகள் நெல் அறுவடை இயந்திரங்களை நேரடியாக வாடகைக்கு பெற புதிய வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் பெ. ரமண சரஸ்வதி கூறியுள்ளார்.

இது பற்றி அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அரியலூர் மாவட்ட விவசாயிகளின் கவனத்திற்கு அரியலூர் மாவட்ட விவசாயிகள் நெல் அறுவடையில், பல சிரமங்களை சந்தித்து வருகிறார்கள். அறுவடை நேரத்தில் அறுவடைக்கு கூலி ஆட்கள் கிடைக்காததால் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். இம்மாதிரியான வேலை ஆட்கள்தட்டுப்பாட்டை போக்க தமிழக அரசு, ஒருங்கிணைந்த அறுவடை இயந்திரங்கள் மூலம், விளைந்த பயிர்களை அறுவடை செய்யும் போது, உரிய நேரத்தில் அறுவடை செய்வது மட்டுமின்றி, அறுவடையின் போது ஏற்படக்கூடிய மகசூல் இழப்பினை வெகுவாக குறைக்க முடியும். அறுவடை இயந்திரங்களுக்காக சில நேரங்களில், விவசாயிகள் இடைத்தரகர்களிடம் தள்ளப்பட்டு, தரகு கொடுத்து அறுவடை செய்வதால், செலவு அதிகமாவதுடன் மொத்த வருமானமும் குறைகிறது.

அரியலூர் மாவட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டின்படி, இந்த பிரச்சனையை தீர்க்க, வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், அறுவடை இயந்திரங்களை நேரடியாக பெற, உரிமையாளர் பெயர், விலாசம், கைப்பேசி எண்ணுடன் மாவட்ட வாரியாக, வட்டார வாரியாக, உழவன் செயலியின் மூலம் 'வேளாண் இயந்திரங்கள் வாடகைக்கு" என்ற முகப்பை தேர்வு செய்து, 'அறுவடை இயந்திரங்கள் பற்றி அறிய" என்றதுணை முகப்பின் மூலம், அரியலூர் மாவட்டத்தில் அதன் தொடர்புடைய வட்டாரத்தை உள்ளீடு செய்து தெரிந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள், உழவன் செயலிக்குள் சென்று நேரடியாக உரிமையாளரை தொடர்பு கொண்டு இடைத்தரகர் இன்றி நெல் அறுவடை இயந்திரங்களை பெற்று பயனடைய வேண்டும் என, மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.ரமண சரஸ்வதி, தெரிவித்துள்ளார்.


## செல்ல பிராணியான வளர்ப்பு நாய் பிளாக்கியை டுவிட்டரின் புதிய சி.இ.ஓ. என அறிமுகப்படுத்திய எலான் மஸ்க்

வாஷிங்டன் பிப்.16–

டுவிட்டரின் புதிய சி.இ.ஓ. இவர்தான் என புகைப்படம் வெளியிட்டு எலான் மஸ்க் அறிமுகப்படுத்தி உள்ளார்.

சமூக ஊடகங்களில் ஒன்றான டுவிட்டர் நிறுவனம் குறுஞ்செய்திகளை தங்களுக்குள் மக்கள் அனுப்பி, பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு உருவானது. பின்னர், சிறிய அளவிலான வீடியோக்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி, பரிமாறி கொள்ளும் வகையில் அதன் செயல்பாடுகளில் விரிவாக்கம் செய்யப்பட்டன. இதன் தலைமை செயல் அதிகாரியாக (சி.இ.ஓ.) செயல்பட்டு வந்த ஜாக் டோர்சி கடந்த 2021-ம் ஆண்டு நவம்பர் 29-ந் தேதி பதவி விலகினார். இதனை தொடர்ந்து, டுவிட்டர் நிறுவனத்தின் புதிய தலைமை அதிகாரியாக இந்தியரான பராக் அகர்வால் நியமனம் செய்யப்பட்டார். 10 ஆண்டுகளுக்கு முன்னர் டுவிட்டர் நிறுவனத்தில் பணியில் சேர்ந்த, இந்திய வம்சாவளியான பராக் அகர்வால் மும்பை ஐ.ஐ.டி.யில் படித்தவர். இதன்பின்னர், உலகின் மிகப்பெரிய பணக்காரரும் டெஸ்லா நிறுவனருமான எலான் மஸ்க், கடந்த ஆண்டு அக்டோபர் இறுதியில் டுவிட்டர் நிறுவனத்தின் உரிமையாளரானார். அதற்கான ஒப்பந்தம் முடிந்தவுடன் எலான் மஸ்க் டுவிட்டரின் உயர் அதிகாரிகளை அதிரடியாக பணி நீக்கம் செய்து உத்தரவிட்டார். குறிப்பாக டுவிட்டர் தலைமை நிர்வாக அதிகாரி (சி.இ.ஓ.) பராக் அகர்வால் மற்றும் தலைமை நிதி அதிகாரி நெட் செகல், டுவிட்டர் சட்ட மற்றும் கொள்கை நிர்வாகி விஜய காடே உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஓராண்டு நிறைவடைவதற்குள் பதவியில் இருந்து பராக் அகர்வால் நீக்கப்பட்டது சமூக வலைத்தளங்களில் அதிகம் விவாதிக்கப்பட்டது. எனினும், பராக் அகர்வாலுக்கு இழப்பீடாக டுவிட்டர் நிறுவனத்திடம் இருந்து ஏறக்குறைய 42 மில்லியன் டாலர், இந்திய மதிப்பில் ரூ.346 கோடி கிடைக்கலாம் என்று தகவல் வெளியானது. டுவிட்டரை வாங்குவதற்கு முன்பு, பராக் அகர்வாலுடனான எலான் மஸ்க்கின் தகவல் பரிமாற்றங்கள் திருப்தியாக இல்லை என கூறப்படுகிறது. டுவிட்டர் வாரியத்தில் இணைவது என்பது நேரம் வீணாகும் விசயம் என மஸ்க் குறிப்பிட்டார். இதனாலேயே, டுவிட்டரை மஸ்க் வாங்குவது தள்ளி போனது என்றும் கூறப்படுகிறது. இந்நிலையில், டுவிட்டருக்கான சி.இ.ஓ. பதவி காலியான நிலையில், அதற்கான புதிய நபரை தேடும் பணியை மஸ்க் ஈடுபட்டார். அவருக்கு ஈடு கொடுக்கும் வகையிலான நபரை தேடும் பணியில் வெற்றியும் பெற்றுள்ளார். இதன்படி, அவர் புதிய சி.இ.ஓ.வை அறிமுகப்படுத்தி உள்ளார். ஆனால், அது ஒரு மனிதரல்ல. எலான் மஸ்க்கின் செல்ல பிராணியான அவரது வளர்ப்பு நாய் பிளாக்கி டுவிட்டரின் புதிய சி.இ.ஓ. என மஸ்க் அறிமுகப்படுத்தி இருக்கிறார். மற்ற சி.இ.ஓ.க்களை விட சிறந்த சி.இ.ஓ.வாக தனது பிளாக்கி இருக்கும் என மஸ்க் உணருகிறார்.



இதுபற்றி புகைப்படம் ஒன்றை பகிர்ந்து கொண்டுள்ள மஸ்க், அதில், சி.இ.ஓ. நாற்காலியில் பிளாக்கி அமர்ந்திருக்கும் காட்சி உள்ளது. அதற்கு டுவிட்டர் நிறுவனத்தின் கருப்பு நிற டி-சர்ட் அணிந்தபடியும், அதில் சி.இ.ஓ. என்று எழுதியபடியும் காணப்படுகிறது. அதற்கு முன்னாள் மேஜையில் சில ஆவணங்கள் பரப்பி வைக்கப்பட்டு உள்ளன. அதன் மேல், கையெழுத்திற்கு பதிலாக பிளாக்கியின் கால் தடங்களும் பதிவு செய்யப்பட்ட காட்சிகளும் உள்ளன. ஏதேனும் அவசர இ-மெயில் அனுப்ப வேண்டும் என பிளாக்கி விரும்பினால் அதற்கு உதவுவதற்கு ஏற்ற வகையில், டுவிட்டர் லோகோவுடன் கூடிய சிறிய லேப்டாப் ஒன்றும் பிளாக்கியின் முன்னால் உள்ளது. இந்த புகைப்படம் வெளியிட்டு, டுவிட்டரின் புதிய சி.இ.ஓ.வை பார்த்து ஆச்சரியம் ஏற்படுகிறது என மஸ்க் தெரிவித்து உள்ளார்.

# காஞ்சிபுரம் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கோவிலில் மகாபாரத பெரு விழா

## துரியோதனன் படுகள நிகழ்ச்சியில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்



காஞ்சிபுரம், பிப். 16 -

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பிள்ளையார் பாளையம் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, ஸ்ரீ திரௌபதி அம்மன் திருக்கோவிலில் ஆண்டுதோறும் மகாபாரத பெருவிழா நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இந்தாண்டு மகாபாரத பெருவிழா கடந்த மாதம் 23 ஆம் தேதி அன்று கொடியேற்றத்துடன் தொடங்கி நாள்தோறும் பல்வேறு சொற்பொழிவு நிகழ்ச்சிகள், நாடகங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிலையில் மகாபாரத பெரு விழாவின் முக்கிய நிகழ்வான துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி வெகு விமரிசையாக நடைபெற்றது. அதையொட்டி பிரம்மாண்டமாக துரியோதனன் சிலை வடிவமைக்கப்பட்டு கட்டைக்கூத்து கலைஞர்களால் பீமன் - துரியோதனன் போரிடும் போர்க்களக் காட்சி தத்ரூபமாக நடத்தப்பட்டது. இதில் பீமன் வேடமணிந்த ஒருவர் துரியோதனன் சிலையின் தொடைப்பகுதியில் கதாயுதத்தால் ஓங்கி அடித்ததில் அந்த இடத்தில் இருந்து சிவப்பு நிற திரவம் வடிந்ததையடுத்து அதை திரௌபதி வேடமணிந்தவர் கூந்தலில் பூசியபின் துரியோதனன் சிலையை மூன்று முறை வலம் வந்து சபதம் முடிந்ததையடுத்து அம்மனுக்கு மகா தீபாராதனைகள் காண்பிக்கப்பட்டது.

இந்த துரியோதனன் படுகளம், தீமிதி விழாவிற்காக காப்பு கட்டிக்கொண்டு விரதம் இருக்கும் பக்தர்களும், காஞ்சிபுரம் மாநகராட்சி 11 வது வார்டு மாமன்ற உறுப்பினர் குட்டி என்கிற கோ.சண்முகானந்தம் உள்பட பிள்ளையார்பாளையம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த திரளான பொதுமக்களும் கலந்துக்கொண்டு தங்களின் வேண்டுதல் காணிக்கையை செலுத்தி தரிசனம் செய்து, ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, ஸ்ரீ திரௌபதி அம்மனை வழிபட்டுச் சென்றனர். மாலை தீமிதி திருவிழாவும் வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.



வேலூர் மாவட்டம், கணியம்பாடி அரசினர் மேல்நிலைப் பள்ளியில் தேசிய குடற்புழு நீக்க தினத்தையொட்டி மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் பள்ளிக்கு வருகை தந்து குடற்புழு நீக்க மாத்திரைகளை மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். துணை இயக்குனர் சுகாதாரப் பணிகள் மருத்துவர் பானுமதி, வருவாய் கோட்டாட்சியர் பூங்கொடி கணியம்பாடி ஒன்றிய குழு தலைவர் திவ்யா கமல்பிரசாத் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் அறிவுறுத்தலின் பேரில் பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம் ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதியன்று நடைபெறும் என்றும் அன்று விடுமுறையாக இருந்தால் மறு வேலை நாட்களில் நடைபெறும் என்று கூறியதன் ஒரு பகுதியாக நேற்று புதன்கிழமை மாவட்ட ஆட்சியர் அலுவலுகம் மற்றும் அனைத்து அரசு துறைகளிலும் அலுவலக நேரங்களில் பொதுமக்கள் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்று கொண்டுள்ளது. அந்தந்த துறை அதிகாரிகள் பொதுமக்களின் மனுக்களை அவரவர் அலுவலுகத்தில் பெற்று குறித்த நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரரிடம் கூறியுள்ளார்கள். இதன் ஒரு பகுதியாக காரைக்கால் ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் முகமது மன்சூர் தலைமையில் பொதுமக்களின் மனுக்கலை பெற்றுக் கொண்டார். குறிப்பிட்ட நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மனுதாரர்களிடம் கலெக்டர் கூறினார்.



சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தின் முன்னாள் திமுக தலைவர் கே.சின்னராசு இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி அனுசரிக்கப்பட்டது. கழக தோழர்கள் மற்றும் உறவினர்கள் தீவட்டிபட்டி பேருந்து நிறுத்தம் அருகில், அன்னாரது திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்த நிகழ்வில், மறைந்த கே.சின்னராசு புதல்வரும் காடையாம்பட்டி கிழக்கு ஒன்றிய செயலாளருமான கே.சி. அறிவழகன் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார், மேலும் மேற்கு ஒன்றிய செயலாளர் இரவிச்சந்திரன், பேரூராட்சி தலைவர் பிரபாகரன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த ஆர்.கே.எஸ்.இராஜகோபால், காளியப்பன், மாவட்ட துணை அமைப்பாளர் இரா.திருமாரவி, மாவட்ட பொருளாளர் ராஜவேல் ஆகியோர் கலந்து கொண்டு மலர் தூவி, மலர் அஞ்சலி செலுத்தினர். நிகழ்ச்சியின் இறுதியில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

# ஆரணியில் வெறி நோய் தடுப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் தடப்பூசி முகாம்



ஊத்துக்கோட்டை, பிப். 16 -

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஆரணி பேரூராட்சி மன்ற வளாகத்தில் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வெறி நோயினை தடுப்பதற்கான விழிப்புணர்வு மற்றும் இலவச வெறி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, பொன்னேரி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் கோபி கிருஷ்ணா தலைமை தாங்கினார். ஆரணி பேரூராட்சி செயல் அலுவலர் கலாதரன், பேரூராட்சி மன்ற தலைவர் ராஜேஸ்வரி, துணைத்தலைவர் வக்கீல் சுகுமார், நியமன குழு உறுப்பினர் டி.கண்ணதாசன், ஆரணி பேரூர் திமுக செயலாளர் பி.முத்து மற்றும் பேரூராட்சிமன்ற உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர்.

இம்முகாமில், 133 நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதன் பின்னர், பள்ளி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் வெறி நோய் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. அப்பொழுது பேசிய டாக்டர்கள் மெய்ஞான சுந்தரி, கிரிதரன், சோபனா, சித்ரா ஆகியோர் வீட்டில் வளர்க்கும் செல்லப் பிராணிகளுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டியதன் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் விளக்கிக் கூறினர்.

முன்னதாக அனைவரையும் கால்நடை ஆய்வாளர்கள் கீதா, பிரபாவதி ஆகியோர் வரவேற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் தனசேகர், பசுபதி, ஆறுமுகம் ஆகியோர் செய்திருந்தனர். செல்வி நன்றி கூறினார்.

# தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் தீபாவளி பண்டு சீட்டு நடத்தி ஏமாற்றியவரின் தாயை சிறைப்பிடித்து பாதிக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டம்



ஊத்துக்கோட்டை, பிப். 16 -

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மாளந்தூர் ஊராட்சியில் வசித்து வந்தவர் ஜோதி (வயது36). இவர் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் திருமண சீர்வரிசை பொருட்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றையும் நடத்தி வந்தார்.

இந்நிலையில், மாதந்தோறும் பணம் செலுத்தினால் தீபாவளிக்கு இரண்டு கிராம் தங்கம், 4 கிராம் தங்கம், ஸ்வீட், பட்டாசு உள்ளிட்ட பொருட்கள் கொடுப்பதாக சுமார் 12,000 பேரிடம் கோடிக்கணக்கான ரூபாய் ஏஜென்ட்கள் மூலம் வசூல் செய்ததாக கூறப்படுகிறது. ஆனால், குறித்த நேரத்தில் யாருக்கும் தங்கம் உள்ளிட்ட பொருட்களை தரவில்லையாம்.

எனவே, பணம் கட்டியவர்கள் தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஜோதி தலைமறைவானார். இதன் பின்னர், போலீசார் துப்பாக்கியுடன் சுற்றி திரிந்து கொண்டிருந்த ஜோதியை கைது செய்து சிறையில் அடைத்தனர். கடந்த வாரம் ஜோதி ஜாமீனில் வெளியில் வந்துள்ளார். இந்நிலையில், நேற்று இரவு ஜோதியின் தாய் ஜெகதாம்பாள் (வயது60) தாமரைப்பாக்கம் கூட்டுச்சாலைக்கு வந்திருந்தார்.

இதனை அறிந்த பணம் கட்டி ஏமாந்தவர்களில் சிலர் மூதாட்டி ஜெகதாம்பாளை சிறைபிடித்து ஜோதியை உடனடியாக சம்பவ இடத்துக்கு வருமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்த வெங்கல் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் தலைமையில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர்.

பணம் கட்டியவர்கள் ஜோதி உடனடியாக இங்கே வரவேண்டும் தங்களுக்கு பணத்தை திருப்பி தர வேண்டும் என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த சம்பவத்தால் சுமார் 2 மணி நேரம் இப்பகுதியில் பதட்டமும், பரபரப்பும் நிலவியது.

# எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் நடத்திய இயற்கை உணவு கண்காட்சி



செங்கல்பட்டு, பிப். 16 -

எஸ்.ஆர்.எம். வேளாண் அறிவியல் கல்லூரியின் வேளாண் துறையில் இளம் அறிவியல் 4 ஆம் ஆண்டு படிக்கும் மாணவிகள் அ.ஜெ.சுருதிவர்ஷினி, ச.சிவதர்ஷினி, கி.இதழி, சிவபிரித்தி, ர.ப.ரஹ்ஷண்யா, வ.நிவேதா, த.அபிதா ச.ஆனந்தவர்ஷினி, ர.காவியா, த.சு.பவானி ஆகியோர் ஒரத்தி கிரமத்தில் 3 மாதங்கள் தங்கி விவசாய மக்களுக்கு வேளாண்மை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாண்டு சர்வதேச சிறுதானிய ஆண்டு ஆகும். அதனை கருதி ஒரத்தி மேல்நிலைப்பள்ளியில் இயற்கை உணவு கண்காட்சி நடத்தினர். இக்கண்காட்சியில் வேளாண் துறை அதிகாரி சக்திவேல், பேராசிரியர்கள் டாக்டர் ராஜசேகரன் , டாக்டர் முகமத் இக்ஷான், டாக்டர் நவின் குமார், டாக்டர் வனித்தா, மற்றும் ஒரத்தி மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் சாந்தி ஆகியோர் தலைமையில் நடைப்பெற்றது.

இக்கண்காட்சியில் பாரம்பரிய மிக்க தானிய வகைகள், பருப்பு வகைகள், சிறுதானிய வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள் வைத்து 30 க்கும் மேற்பட்ட பாரம்பரிய உணவுகளை வைத்தனர். இவற்றின் நற்குணங்கள், பயன்கள் மற்றும் அதில் உள்ள புரதச்சத்துகளைப் பற்றி அக்கண்காட்சியில் பங்கு பெற்றவர்களுக்கும் மற்றும் அப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கும் விளக்கம் அளித்தனர். இயற்கை உணவை உண்டு ஆரோக்கியமான வாழ்வை வாழ்வீர் என்பதை எடுத்துரைத்தனர்.

# சித்தம்பாக்கம் கிராமத்தில் டிராக்டரில் இருந்து தவறி விழுந்த பெண் விவசாய கூலித் தொழிலாளி பலி

ஊத்துக்கோட்டை, பிப். 16 -

திருவள்ளூர் மாவட்டம், வெங்கல் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரும்பாக்கம் ஊராட்சியைச் சேர்ந்த பஜனைகோவில் தெருவில் வசித்து வந்தவர் தனம் (வயது53). விவசாயக் கூலி தொழிலாளி ஆவார்.

இவர் நேற்று காலை விவசாயபயிர் நடவுசெய்ய ஒரு டிராக்டரில் அமர்ந்து வேலைக்கு சென்றார். சித்தம்பாக்கம் ஒதிக்காடு சாலையில் சென்றபோது வேகத்தடையில் டிராக்டர் ஏறி இறங்கியபோது டிராக்டரில் அமர்ந்திருந்த தனம் தவறி கீழே விழுந்தார். இதில், தலையில் பலத்த காயமடைந்த அவர் ரத்த வெள்ளத்தில் துடி துடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியானார்.

இந்த விபத்து குறித்து தனத்தின் மகள் நிர்மலா வெங்கல் காவல் நிலையத்தில் புகார் செய்தார். போலீஸ் இன்ஸ்பெக்டர் தர்மலிங்கம் தலைமையில் போலீசார் வழக்கு பதிவு செய்து பலியான தனம் உடலைமீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத சோதனைக்கு அனுப்பி வைத்தனர். தலைமறைவான டிராக்டர் டிரைவரை வலை வீசி தேடி வருகின்றனர்.

# கொசவன்பேட்டை ஊராட்சியில் பாம்பு கடித்து சிறுவன் பலி

ஊத்துக்கோட்டை, பிப். 16 -

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், கொசவன் பேட்டை ஊராட்சியைச் சேர்ந்த பெருமாள் கோவில் தெருவில் வசித்து வருபவர் ராஜகோபால். இவரது மகன் சரண்குமார் (வயது10). இச்சிறுவன் கவரப்பேட்டையில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் நான்காம் வகுப்பு படித்து வந்தான்.



இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை வீட்டின் அருகே சிறுவன் சரண்குமார் விளையாடிக் கொண்டிருந்தான். சிறிது நேரத்தில் வீட்டிற்கு வந்த சரண்குமார் மயக்கமாக உள்ளது என தனது பெற்றோரிடம் கூறினான். உடனடியாக பெரியபாளையத்தில் உள்ள ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு சிறுவனுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டது.

பின்னர், சென்னை குழந்தைகள் நல அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று அனுமதித்தனர். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் வழியிலேயே சிறுவன் இறந்து விட்டதாக கூறினர். மேலும் சரண்குமாரை பாம்பு கடித்ததால் பலியானதாக டாக்டர்கள் கூறினர். இந்த சம்பவம் குறித்து பெரியபாளையம் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# வேலூர் மலைக்கொடி ஸ்ரீபுரம் நாராயணி மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை

## மருத்துவமனை நிர்வாகம் மற்றும் டாக்டர்கள் தீவிர கவனிப்பு!



வேலூர், பிப்.16 -

வேலூர் மாவட்டம், அரியூரில் தங்ககோவில் சார்பில் நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் நடத்தப்படுகிறது. இந்த மருத்துவமனை கடந்த பல ஆண்டுகளாக ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் குறைந்த செலவில் சிகிச்சை அளித்து வருகிறது.

தற்போது முதல் முதலாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையும் துவங்கியுள்ளனர். சென்னையில் விபத்து ஒன்றில் சிக்கிய ரேபி (41) ராமச்சந்திரா மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். ஆனால் அவர் அங்கு மூளைச்சாவு அடைந்தார். வேலூர் நாராயணி மருத்துவமனையில் சேலத்தை சேர்ந்த கூலித்தொழிலாளி பழனிசாமி (48) என்பவருக்கு கல்லீரல் சிகிச்சை நடந்து வருகிறது.

இந்த கல்லீரல் போரூர் ராமசந்திரா மருத்துவமனையிலிருந்து பலத்த பாதுகாப்புடன் 2 மணி நேரத்தில் ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு வரப்பட்டு கூலித் தொழிலாளி பழனிச்சாமிக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நடந்தது. இந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு ரூ.30 லட்சம் வரையில் செலவாகிறது. இதில் 20 சதவிகிதம் மட்டுமே நோயாளியிடம் வசூலிப்பதாக தகவல் தெரிவிக்கின்றனர்.

மீதமுள்ள தொகை தங்ககோவில் நாராயணி அறக்கட்டளை சார்பில் செலுத்தப்படு சிகிச்சை அளிக்கப்படுகிறது என தெரிவித்தனர். வருங்காலத்தில் இருதய மாற்று அறுவை சிகிச்சையும் இங்கு செய்யபடவுள்ளது. முதல்வர் காப்பீட்டு திட்டத்தில் இந்த உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்யவும் மருத்துவ நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்து நாராயணி மருத்துவமனையின் இயக்குநர் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறுகையில், ஏற்கனவே நாங்கள் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து வருகிறோம். தற்போது இங்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையும் செய்யப்படுகிறது. இதன் மூலம் ஏழை மக்கள் பயன் பெறுவார்கள். இருதய மாற்று அறுவை சிகிச்சையும் முதல்வர் காப்பீட்டில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று கூறினார்.

# மராட்டியத்தில் உணவு சமைக்க மறுத்த மனைவியை தாக்கிய கணவருக்கு 10 ஆண்டு சிறை



மராட்டியம் பிப்.16-

உணவு சமைக்க மறுத்த மனைவியை தாக்கிய கணவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலம், தானே மாவட்டத்தை சேர்ந்தவர் வன்ய ஜெகன் கொர்டி (39). இவரது மனைவி லட்சுமிபாய். இதனிடையே கடந்த 2013-ம் ஆண்டு கணவன், மனைவி இடையே அடிக்கடி சண்டை ஏற்பட்டு வந்துள்ளது. ஜெகன் வேலையில்லாமல் வீட்டிலேயே இருந்ததால் கணவன், மனைவி இடையே சண்டை ஏற்பட்டு வந்துள்ளது. அந்த வகையில், 2013 செப்டம்பர் 22-ஆம் தேதி இருவருக்கும் இடையே மீண்டும் சண்டை ஏற்படவே இனி உங்களுக்கு உணவு சமைக்கமாட்டேன் என்று லட்சுமி தனது கணவர் ஜெகனிடம் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த ஜெகன் வீட்டில் இருந்த மரக்கட்டையால் மனைவி லட்சுமி தலையில் கடுமையாக தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த லட்சுமி ரத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், தன்னை தாக்கிய கணவர் மீது லட்சுமி காவல்துறையில் புகார் அளித்தார். புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த காவலர்கள் ஜெகனை கைது செய்தனர். பின்னர் அவர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்ட நிலையில் இது தொடர்பான வழக்கு தானே மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கை நேற்று முந்தினம் விசாரித்த நீதிமன்றம், மனைவியை கடுமையாக தாக்கிய வழக்கில் ஜெகன் குற்றவாளி என்று அறிவித்தது. குற்றம் நிரூபிக்கப் பட்டதையடுத்து ஜெகனுக்கு 10 ஆண்டுகள் சிறை விதித்து நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், ஜெகனுக்கு நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. இந்த தீர்ப்பை தொடர்ந்து ஜெகனை காவலர்கள் சிறையில் அடைத்தனர்.



தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவர் விஜயகாந்தின் மகன் விஜய் பிரபாகர் ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வேட்பாளர் எஸ்.ஆனந்துக்கு வாக்குகள் சேகரிக்க வந்தபோது சித்தோடு பைபாஸ் அருகில் கட்சியினர் வரவேற்பு கொடுத்தனர்

# மயிலாடுதுறையில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் அரசின் ஓராண்டு சாதனை விளக்கப் புகைப்பட கண்காட்சி திறப்பு விழா



மயிலாடுதுறை, பிப்- 16;

மயிலாடுதுறை மாவட்டத்தில் அருள்மிகு பரிமள ரங்கநாதர் கோயில் நந்தவனத்தில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் ஓயா உழைப்பின் ஓராண்டு கடைக்கோடி தமிழர்களின் கனவுகளை தாங்கி என்ற தலைப்பில் தமிழ்நாடு அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி திறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. தொடர்ந்து சமூக நலத்துறை சுகாதாரத்துறை, வேளாண் துறை, ஊரக வளர்ச்சி துறை, கூட்டுறவுத்துறை உணவு பாதுகாப்புத்துறை, மகளிர் திட்டம், பள்ளிக்கல்வித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து அருங்காட்சியகம் அமைக்கப்பட்டிருந்தது. அருங்காட்சிய அரங்கத்தை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி ரிப்பன் கத்தரித்து துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜகுமார், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர் மயிலாடுதுறை ஒன்றிய குழு தலைவி காமாட்சி மூர்த்தி, மயிலாடுதுறை கோட்டாட்சியர் யுரேகா, தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமார் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதில் நையாண்டி மேளம் மற்றும் நாட்டுப்புற கலைஞர்களின் இசை நிகழ்ச்சியுடன் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தொடர்ந்து பல்வேறு துறைகளின் கீழ் தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் ரவிச்சந்திரன் மற்றும் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலக ஊழியர்கள் செய்திருந்தனர்.

# ஆதி மகோத்சவம் என்ற பெயரிலான மெகா தேசிய பழங்குடியின திருவிழாவை பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்



டெல்லி பிப்.16-

டெல்லியில் ஆதி மகோத்சவம் என்ற பெயரிலான மெகா தேசிய பழங்குடியின திருவிழாவை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் பங்காற்றிய பழங்குடி மக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், அவர்களது நலன்களுக்கான நடவடிக்கைகளை பிரதமர் மோடி முன்னின்று மேற்கொண்டு வருகிறார். இதன்படி, பழங்குடியினத்தின் கலாசாரங்களை தேசிய அளவில் காட்சிப்படுத்தும் முயற்சியாக, டெல்லியில் உள்ள மேஜர் தியான் சந்த் தேசிய அரங்கத்தில் இன்று காலை 10.30 மணியளவில் ஆதி மகோத்சவம் என்ற பெயரிலான மெகா தேசிய பழங்குடியின திருவிழாவை தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பழங்குடி கலாச்சாரம், கைவினை பொருட்கள், உணவுப் பொருட்கள், வர்த்தகம் மற்றும் பாரம்பரிய கலை ஆகியவை காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியானது மத்திய பழங்குடியின விவகாரங்களுக்கான அமைச்சகம் சார்பில் இன்று தொடங்கி பிப்ரவரி 27-ந் தேதி வரை நடத்தப்படுகிறது. நிகழ்ச்சியில் 200 ஸ்டால்கள் அமைக்கப்படும். இந்த மகோத்சவத்தில் ஆயிரக்கணக்கான பழங்குடியின கலைஞர்கள் பங்கு கொள்கின்றனர். சர்வதேச சிறுதானியங்களுக்கான ஆண்டாக 2023-ம் ஆண்டு கொண்டாடப்படும் சூழலில் பழங்குடியினரால் வளர்த்தெடுக்கப்பட்ட ஸ்ரீ அன்னா சிறுதானியமும் இதில் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

# பிரதமர் மோடி புஜாராவின் 100-வது டெஸ்ட் போட்டிக்கு வாழ்த்து



டெல்லி பிப்.16-

பிரதமர் மோடி புஜாராவின் 100-வது டெஸ்ட் போட்டிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு வந்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இதில் நாக்பூரில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. இந்நிலையில் இந்தியா, ஆஸ்திரேலியா இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி தலைநகர் டெல்லியில் உள்ள அருண்ஜெட்லி ஸ்டேடியத்தில் நாளை தொடங்குகிறது. இந்த டெஸ்ட் இந்திய வீரர் புஜாராவுக்கு 100-வது டெஸ்ட் போட்டியாகும்.

இந்த மைல்கல்லை எட்டும் 13-வது இந்தியர் என்ற பெருமையை புஜாரா பெறுகிறார். புஜாரா இதுவரை 99 டெஸ்டுகளில் விளையாடி 19 சதம், 34 அரைசதம் உள்பட 7,021 ரன்கள் (சராசரி 44.15) எடுத்துள்ளார். அவர் மொத்தம் 15,797 பந்துகளை சந்தித்துள்ளார். இந்த நிலையில் புஜாரா நேற்று முந்தினம் பிரதமர் மோடியை நேரில் சந்தித்துள்ளார்.

இந்நிலையில் பிரதமர் மோடி புஜாராவின் 100-வது டெஸ்ட் போட்டிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், புஜாரா உங்களை சந்தித்ததில் மகிழ்ச்சி. உங்களின் 100-வது டெஸ்ட் போட்டிக்கு வாழ்த்துக்கள். என தெரிவித்துள்ளார்.

# கூடுதல் கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை பிப்.16-

திரையரங்குகளில் கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என தமிழக அரசு கண்காணிக்க வேண்டும் என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கூடுதல் கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்எனதமிழகஅரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சிங்கம் 3, பைரவா படங்கள் பண்டிகை காலங்களில் வெளியான போது கூடுதல் கட்டணம் வசூலித்ததாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தேவராஜன் என்பவர் வழக்கு தொடர்ந்திருந்தார். இது தொடர்பாக அரசு மற்றும் காவல்துறையிடம் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்த போது, தமிழக அரசு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில், கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்ட தியேட்டர்களிடம் அபராதம் வசூலிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தை விட கூடுதல் கட்டணம் வசூலிக்கும் திரையரங்குகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்எனதமிழகஅரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் கூடுதலாக கட்டணம் வசூலிக்கப்படுகிறதா என தமிழக அரசு கண்காணிக்க வேண்டும். எனவும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# ஆவுடையார்கோவில் அருகே கதிர் அறுப்பதில் இரு தரப்பிற்கு இடையே தகராறு - கதிரை அறுத்த வருவாய் துறை



ஆவுடையார்கோவில் பிப்.16-

ஆவுடையார்கோவில் அருகே நரிக்குடி கிராமத்தில் கதிர் அறுப்பதில் இரு தரப்பிற்கு இடையே எழுந்த தகராறு காரணமாக வருவாய் துறையினர் கதிரை அறுத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார் கோவில் தாலுகா சாத்தியகுடி ஊராட்சியில் உள்ள நரிக்குடி கிராமத்தில் கா.கருப்பையா என்கிற ஒரே பெயரைக் கொண்ட இரு தரப்புக்கும் இடையே சுமார் ஒரு ஏக்கர் நிலத்தில் கதிர் அறுப்பதில் கடந்த ஒரு மாதமாக தகராறு இருந்து வந்தது. இதனையடுத்து இரண்டு தரப்பும் கதிரை அறுக்க வேண்டும் என்று தாசில்தாரிடம் உரிமை கோரி இருந்தனர். இந்த நிலையில் காளியப்பன் மகன் கருப்பையா என்பவர் 45 வருடம் அனுபவம் உள்ளதாகவும் செட்டில்மெண்ட் பட்டா உள்ளதாகவும் அதனால் தான் கதிர் அறுக்க வேண்டும் என்றும் கூறி வந்த நிலையில், ஆவுடையார்கோவில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அறந்தாங்கி ஆர்டிஓ அலுவலகத்தில் 45 வருடம் அனுபவம் உள்ள காளியப்பன் மகன் கருப்பையா கதிர் அறுக்க வலியுறுத்தி காத்திருப்பு போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருந்தனர்.

இந்நிலையில் அறந்தாங்கியில் ஆர்டிஓ அலுவலகம் முன்பாக விவசாய சங்கங்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் பொழுதே நரிக்குடிக்கு வந்த ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் வில்லியம் மோசஸ் தலைமையிலான வருவாய்த்துறையினர் இரண்டு தரப்பையும் கதிரை அறுக்க விடாமல் தாங்களே கதிரை அறுத்து வைத்து விடுகிறோம். யாருக்கு கோர்ட்டில் உள்ள வழக்கு ஜெயிக்கிறதோ அவரிடம் பணம் ஒப்படைக்கப்படும் என்று கூறி கதிரை அறுத்து சென்று விட்டார்கள். இந்த நிகழ்வு நரிக்குடி கிராமத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னையில் பிப்ரவரி 20-ஆம் தேதி ஓ.பன்னீர்செல்வம் தரப்பு ஆலோசனைக் கூட்டம்



சென்னை பிப்.16-

சென்னையில் வரும் 20-ஆம் தேதி பண்ருட்டி ராமச்சந்திரன் தலைமையில் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் ஆலோசனை நடத்துகின்றனர். சென்னையில் உள்ள தனியார் ஹோட்டலில் ஆலோசனை நடத்தப்படவுள்ளது.

இது குறித்து ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அதிமுக தலைமைக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட கழகச் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் அதிமுக அரசியல் ஆலோசகர் பண்ருட்டி ச.ராமச்சந்திரன் தலைமையில், சென்னை, எக்மோர் பாந்தியன் சாலையில் உள்ள அசோகா ஹோட்டலில் பிப்ரவரி 20-ஆம் தேதி மாலை 4 மணியளவில் நடைபெற உள்ளது. இதனையடுத்து அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அதில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

# தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் என்.ஐ.ஏ. அதிரடி சோதனை




சென்னை பிப்.16-

சென்னை, கோவை, திருநெல்வேலி, தூத்துக்குடி உள்பட பல்வேறு மாவட்டங்களில் தேசிய புலனாய்வு அமைப்பினர் அதிரடி சோதனை நடத்தினர்.

தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நேற்று காலை முதல் தேசிய புலனாய்வு அமைப்பினர் அதிரடி சோதனை நடத்தினர். பயங்கரவாத அமைப்புகளுடன் தொடர்பில் உள்ளதாக சந்தேகிக்கப்படும் நபர்களின் வீடுகளில் இந்த சோதனை நடைபெற்றது. அதன்படி, சென்னை, திருநெல்வேலி, தென்காசி போன்ற மாவட்டங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

சென்னையில் கொடுங்கையூர், மண்ணடி உள்பட 5 இடங்களில் சோதனை நடைபெற்றது. திருநெல்வேலியில் டவுன் காரிக்கான்தோப்பு பகுதியில் உள்ள மன்சூர் என்பவரின் வீட்டிலும் என்.ஐ.ஏ. சோதனை நடைபெற்றது. அதேபோல், திருநெல்வேலியின் ஏர்வாடியிலும், தென்காசியின் அச்சன்புதூரிலும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை நடத்தினர். கோவை, தூத்துக்குடியிலும் சோதனை நடைபெற்றது. கோவை கார் வெடிப்பு சம்பவம்தொடர்பாகஇந்த சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா என மொத்தம் 3 மாநிலங்களில் 60-க்கும் மேற்பட்ட இடங்களில் என்.ஐ.ஏ. சோதனை நடைபெற்று வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# புதுக்கோட்டை 110/22 கி.வோ துணை மின் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் இன்று மின் விநியோகம் நிறுத்தம்



புதுக்கோட்டை பிப்.

புதுக்கோட்டை 110/22கி.வோ துணை மின் நிலையத்தில் இன்று மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது. இதனையடுத்து, இங்கிருந்து மின் வினியோகம் செய்யப்படும் இராஜகோபாலபுரம், கம்பன் நகர், பெரியார் நகர், பூங்கா நகர், கூடல் நகர், லெட்சுமி நகர், பாரி நகர், சிவகாமி ஆச்சிநகர், சிவபுரம், தேக்காட்டூர், கவிநாடு, அகரப்பட்டி, பெருமாநாடு, திருவரங்குளம், வல்லத்திராக்கோட்டை, நச்சாந்துப்பட்டி, நமணசமுத்திரம், கனக்கம்பட்டி, அம்மையாப்பட்டி, ஆட்டாங்குடி, கடையக்குடி, லேணாவிலக்கு, அம்மினிப்பட்டி, எல்லைப்பட்டி, செல்லுக்குடி மற்றும் பெருஞ்சுனை ஆகிய இடங்களில் இன்று காலை 09:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை மின் விநியோகம் இருக்காது என புதுக்கோட்டை மின்வாரிய உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

# பொன்னமராவதி வட்டார விவசாயிகள் குடுமியான்மலை அரசு அண்ணா பண்ணைக்கு கண்டுணர்வு பயணம்



பொன்னமராவதி பிப்.15-

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டாரத்தில் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் குடுமியான்மலை அரசு அண்ணா பண்ணைக்கு பாரம்பரிய நெல் சாகுபடி செய்வது குறித்த பயிற்சிக்கு கண்டுணர்வு பயணமாக விவசாயிகள் சென்றனர். இந்நிகழ்ச்சியினை, வேளாண்மை உதவி இயக்குநர் பொறுப்பு பழனியப்பா தொடங்கி வைத்தார். இப்பயிற்சிக்கு வேணி வேளாண்மை அலுவலர், அவர்களால் தேர்வு செய்யப்பட்ட 50 விவசாயிகளை சத்தியபாமா வட்டார தொழில்நுட்ப மேலாளர், தலைமையில் அழைத்து சென்றார்.

இப்பயிற்சியில் பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்த விவரங்கள் அதன் சிறப்பியல்புகள், சாகுபடி தொழில்நுட்ப குறிப்புகள் ஆகியவை குறித்து அண்ணா பண்ணை மேலாளர் கௌசல்யா விவசாயிகளுக்கு நேரடி பயிற்சி வழங்கினார். மேலும், பண்ணையில் கருப்பு கவுனி, தங்கசம்பா, தூயமல்லி ஆகிய ரகங்கள் பயிர் செய்யப்பட்டுள்ள வயல்களில் நேரடியாக பார்வையிட்டு சாகுபடி தொழில்நுட்பங்களை தெரிந்து கொண்டனர். மேலும் இப்பயிற்சியில் பண்ணை மேலாளர் ரவீந்தர் பாரம்பரிய நெல் உணவுகள் குறித்து பயிற்சி அளிக்கையில் நாம் தினசரி கருப்பு கவுனி அரிசி உட்கொண்டால் புற்றுநோய் வாராமலும், அதிக அளவு இன்சுலின் சுரக்கும் தன்மையும், தூயமல்லி அரிசி உட்கொண்டால் உடல் உறுப்புகள் வலிமை பெறும் தன்மையும், தங்க சம்பா உட்கொள்வதால் பல் (ம) இதய பகுதிகள் வலுவாகும் தன்மையும் கொண்டது என தெரிவித்தார். இப்பயிற்சியில் விவசாயிகள் அனைவரும் ஆர்வமுடன் பங்கு பெற்றனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பிரசாத், நவீன்குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.

# தென்காசி மக்கள் நலப் பணியாளர் சங்க நிர்வாகிகள் ஆட்சியருடன் சந்திப்பு




தென்காசி பிப்.16-

தென்காசி மாவட்ட மக்கள் நல பணியாளர் சங்கத்தின் நிர்வாகிகள், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

தமிழ்நாடு மக்கள் நல பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச்செயலாளர் நெல்லை புதியவன் தலைமையில், தென்காசி மாவட்ட மக்கள் நல பணியாளர் சங்கத்தின் மாவட்ட தலைவர் வாசுதேவ நல்லூர் முருகன், மாவட்ட செயலாளர் தென்காசி முத்துசாமி, மாவட்ட பொருளாளர் கீழப்பாவூர் அருணாசலம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சங்கரன்கோவில் மாரியப்பன், கடையநல்லூர் ராஜேந்திரன் ஆகியோர் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் துரைரவிச்சந்திரனை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

அதனைத் தொடர்ந்து தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் முத்துக்குமார், மாநில ஊரக வளர்ச்சித் துறை மாநில துணைத் தலைவர் சண்முகசுந்தரம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை சங்கத்தின் நிர்வாகிகள் அரசு ஊழியர்கள் சங்க நிர்வாகிகளையும் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

### பி.பி.சி. அலுவலக சோதனையானது

# பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கு விடப்பட்டிருக்கும் வெளிப்படையான மிரட்டல் - சீமான் கண்டனம்



சென்னை பிப்.16-

பி.பி.சி. அலுவலக சோதனை என்பது பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கு விடப்பட்டிருக்கும் வெளிப்படையான மிரட்டல் என்று சீமான் கூறியுள்ளார்.

பி.பி.சி. ஊடகத்தின் அலுவலகத்தில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியிருப்பது என்பது பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கு விடப்பட்டிருக்கும் வெளிப்படையான மிரட்டலாகும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மும்பை மற்றும் டெல்லியிலுள்ள பி.பி.சி. ஊடகத்தின் அலுவலகத்தில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தியிருப்பது அப்பட்டமான அதிகார முறைகேடாகும். குஜராத்தில் மோடி அரசு நிகழ்த்திய இனப்படுகொலை குறித்த ஆவணப்படத்தை வெளியிட்டதற்கு எதிர்வினையாக பழிவாங்கும் நோக்கோடு நிகழ்த்தப்பட்டிருக்கும் இந்த நடவடிக்கை என்பது பத்திரிக்கைச் சுதந்திரத்திற்கு விடப்பட்டிருக்கும் வெளிப்படையான மிரட்டலாகும்.

உலகப்புகழ் பெற்ற ஊடகமான பி.பி.சி.யின் ஆவணப்படத்தை நேர்மையாக எதிர்கொள்ள திராணியற்று, எதேச்சதிகாரப் போக்கோடு அவற்றிற்குத் தடை விதித்த ஒன்றிய அரசு, தற்போது அதன் நீட்சியாக வருமானவரி துறையினரை ஏவிவிட்டு, தனது அதிகார பலத்தை காண்பிக்க முற்படுவது வெட்கக்கேடானது. வருமானவரித்துறை, மத்தியப் புலனாய்வுத்துறை, மத்திய அமலாக்கத்துறை என தன்னாட்சி அமைப்புகள் யாவற்றையும் கையகப்படுத்தி, அதன் மூலம் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களையும், சனநாயகவாதிகளையும், சமூகச் செயற்பாட்டாளர்களையும், மண்ணுரிமைப் போராளிகளையும், நேர்மையான ஊடகங்களையும் அச்சுறுத்தி வரும் ஒன்றியத்தை ஆளும் பாஜக அரசின் கொடுங்கோல் நடவடிக்கைகளுக்கு எனது வன்மையான கண்டனத்தையும், எதிர்ப்புணர்வையும் பதிவு செய்கிறேன் என்று அதில் கூறியுள்ளார்.

# நாடு முழுவதும் 10 மற்றும் 12-ஆம் வகுப்புக்கான சிபிஎஸ்இ பொதுத் தேர்வுகள் தொடக்கம்



டெல்லி பிப்.16-

சிபிஎஸ்இ 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நேற்று முதல் தொடங்கியது.

10-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மொத்தம் 21,86, 940 பேர் தேர்வு எழுதுகின்றனர். இதில், மாணவர்கள் 12,47, 364 பேரும், மாணவிகள் 9, 39, 566 பேரும், இதர பிரிவினர் 10 பேரும் தேர்வு எழுத உள்ளனர். நாடு முழுவதும் 7,240 மையங்களில் இத்தேர்வு நடைபெறுகிறது. மொத்தம் 24,491 பள்ளிகளிலிருந்து மாணவர்கள் தேர்வு எழுதுகின்றனர்.

12-ம் வகுப்பு பொதுத் தேர்வில், மொத்தம் 16, 96, 770 பேர் தேர்வு எழுதுகின்றனர். இதில், மாணவர்கள் 9,51,332 பேரும், மாணவிகள் 7,45, 433 பேரும் உள்ளனர். நாடு முழுவதும் மொத்தம் 6,759 மையங்களில் தேர்வு நடைபெறுகிறது.



மதுரை பைபாஸ் ரோடு எஸ்.பி.ஐ ஊழியர்கள் இரண்டாவது காலனியில் ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவில், ஸ்ரீ காஞ்சி காமகோடி 68வது பீடாதிபதி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் நூதன விக்ரஹத்தை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது. இதில் பக்தர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அதிகாரிகள் அறைக்கு பூட்டு போட்ட ஒன்றிய பெருந்தலைவரை கண்டித்து ஆர்ப்பாட்டம்



கறம்பக்குடி பிப்.16-

கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒன்றிய ஆணையர் அலுவலகம் மற்றும் ஒன்றிய பொறியாளர் அலுவலகம் மூன்றாவது நாளாக திறக்கப்படாததை கண்டித்து புதுக்கோட்டை தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடியில் புதுக்கோட்டை சாலையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திமுகவை சேர்ந்த ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராஜேந்திர துரைக்கும் ஒன்றிய ஆணையர் கருணாகரன் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் திலகவதி ஆகியோருக்கிடையே ஏற்பட்ட ஒப்பந்த புள்ளி பிரச்சனை காரணமாக ஒன்றிய ஆணையர் அலுவலகம் மற்றும் ஒன்றிய பொறியாளர் அலுவலகத்தை கறம்பக்குடி ஒன்றிய பெருந்தலைவர் மாலா ராஜேந்திர துரை பூட்டு போட்டு பூட்டி சாவியை எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக ஒன்றிய ஆணையர் கருணாகரன் வட்டார வளர்ச்சி அலுவலர் திலகவதி ஆகியோர் கறம்பக்குடி காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தனர். புகாரின் அடிப்படையில் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் நேற்று முந்தினம் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு அளித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மூன்றாவது நாளாக நேற்றும் ஒன்றிய ஆணையர் அலுவலகம், ஒன்றிய பொறியாளர் அலுவலகம் திறக்கப்படாததை கண்டித்து, புதுக்கோட்டை தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கம் சார்பில், மாவட்ட செயலாளர் பால்பிரான்சிஸ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் 50-க்கும் மேற்பட்ட பணியாளர்கள் கலந்து கொண்டனர். இது சம்பந்தமாக மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், 13 ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தை பூட்டி சாவியை மாவட்ட நிர்வாகத்திடம் ஒப்படைத்து மாநிலம் தழுவிய போராட்டம் நடத்தப் போவதாக புதுக்கோட்டை தமிழ்நாடு ஊரக வளர்ச்சி துறை மாவட்ட செயலாளர் பால் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார். உடன் மாவட்ட துணைத் தலைவர் முத்துகிருஷ்ணன், துணைச் செயலாளர் விக்னேஷ், கறம்பக்குடி ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் உட்பட 50கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# புதுக்கோட்டை மாணவிகள் நான்கு பேர் காவிரியில் மூழ்கி பலி

# தியேட்டர்களில் கூடுதல் கட்டணம் தமிழக அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு





# அதிகாரிகள் அறைக்கு பூட்டு கறம்பக்குடியில் ஆர்ப்பாட்டம்


| சென்னை / புதுக்கோட்டை | 16.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை

# வரலாறு

நாளிதழ்

16.02.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கிருஷ்ணதேவராயன் , விஜயநகரப் பேரரசர் (பி.1471) (இ.1529)



கொல்வின் ஆர். டி சில்வா , இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி.1907) (இ.1989)



தெளிவத்தை ஜோசப் , ஈழத்து எழுத்தாளர் (பி.1934) (இ.2022)



இல. கணேசன் , தமிழக அரசியல்வாதி (பி.1945)



## இன்றைய நினைவு நாள்

தாதாசாகெப் பால்கே , இந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் (பி.1870) (இ.1944)



டி. கே. சிதம்பரநாத முதலியார் , தமிழக எழுத்தாளர், வழக்கறிஞர் (பி.1882) (இ.1956)



மேகநாத சாகா , இந்திய வானியற்பியலாளர் (பி.1893) (இ.1956)

